Media: Tamil Murasu
Date: Saturday, 23 December 2017
Page: 2
Headline: Children of offenders receive $40,000 of bursary awards

# குற்றவாளிகளின் பிள்ளைகளுக்கு $40,000 கல்வி உதவி நிதி



நாடாளுமன்றச் செயலாளர் அம்ரின் அமின் கல்வி உதவி நிதி பெற்ற மாணவர்களுடன் உரையாடுகிறார். **படம்: இஸ்கோஸ்**

வசதி குறைந்த குற்றவாளிகள், முன்னாள் குற்றவாளிகளின் குழந்தைகளுக்கு ஆதரவு வழங்க மொத்தம் $40,000 கல்வி உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது.

'இஸ்கொஸ்' எனும் தொழில் துறை மற்றும் சேவைகள் கூட்டுறவு சங்கத்தின் மூலம் 133 மாணவர்கள் $200 முதல் $500 வரை கல்வி உதவி நிதி பெறுகின்றனர்.

'மஞ்சள் நாடா நிதிஇஸ்கோஸ் ஃபேரி காட்பேரண்ட்' என்ற திட்டத்தின் கீழ் அந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. பள்ளியில் பயிலும் நிலையை வைத்து படிப்பில் நல்ல முன்னேற்றம் பெறும் மாணவர்களுக்கும் உதவி நிதி, புத்தகப் பரிசு போன்ற பரிசுகளும் வழங்கப்பட்டன.

ஸ்டர்லிங் சாலையில் அமைந்துள்ள 'எம்டிஐஎஸ்' அரங்கில் கல்வி உதவி வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. உள்துறை, சுகாதார அமைச்சுகளின் நாடாளுமன்றச் செயலாளர் அம்ரின் அமின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

"இன்று உங்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகளை நினைவு கொண்டு, சமூகத்திற்கு எவ்வாறு பங்களிக்கலாம் என்றும் உங்களைவிட மேலும் உதவி தேவைப்படுபவர்களுக்கு எவ்வாறு நீங்கள் ஆதரவு வழங்கலாம் என்பதை பற்றியும் சிந்தியுங்கள்," என்று திரு அம்ரின் அமின் தனது உரையில் குறிப்பிட்டார்.

இவ்வாண்டின் நிதி வழங்கும் விழாவில் 'டான் இயான் கியாம் மஞ்சள் நாடா நிதிஇஸ்கோஸ்' கல்வி உதவி நிதி முதல் முறையாக வழங்கப்பட்டது.

இந்த நிதி பலதுறைத் தொழிற் கல்லூரி அல்லது தொழில்நுட்ப கல்விக் கழகத்தில் பயிலும் வசதி குறைந்த மாணவர்களின் கல்விச் செலவை முழுமையாக ஏற்றுகொள்ளும்.

கல்வி விருதுகள் பெற்றவர்களில் சிராங்கூன் கார்டன்ஸ் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் பிரியதர்ஷினிக்கு $250 மதிப்புள்ள புத்தக மானியத் தொகை வழங்கப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக கல்வி உதவித் தொகையைப் பெற்ற இவருக்கு இவ்வாண்டு கல்வியில் நல்ல முன்னேற்றம் கண்டதற்காக இது கிடைத்தது.

"கிடைக்கும் உதவித் தொகைகளைச் சேமித்து தேவைப்படும் போது புத்தகம் வாங்குவது போன்ற பள்ளிச் செலவுகளுக்கு பயன்படுத்தி வருகிறேன். எதிர்காலத்தில் ஒரு நரம்பியல் மருத்துவராக வேண்டும் என்ற ஆசை எனக்கு உள்ளது. அந்த லட்சியத்தை நோக்கிச் செயல்படுகிறேன்," என்றார் அடுத்த ஆண்டு உயர் நிலை மூன்றுக்கு முன்னேறும் பிரியதர்ஷினி, 14.

**கூடுதல் செய்தி:**
**ப. பாலசுப்பிரமணியம்**

Translation:

## Children of offenders receive $40,000 of bursary awards

The children of offenders and ex-offenders from low-income families received bursary awards totalling up to $40,000.

ISCOS presented the bursaries to 133 students ranging from $200 to $500 each.

The students received the bursaries through YRF-ISCOS Fairy Godparent Programme. Bursary awards and book grants were given based on their education level and results. The award ceremony was held yesterday in MDIS auditorium located at Stirling Road.

"Today, you have received opportunities which you should remember and consider how you are going to give back to society to help those who are in need and less fortunate than yourselves," mentioned Mr Amrin Amin in his speech.

This year at the award ceremony, the Tan Ean Kiam-Yellow Ribbon Fund-ISCOS Bursary Award was presented for the first time. This award is meant for ITE or Polytechnic students and sponsors the full tuition fees.

Among the recipients was Priyadarshini from Serangoon Crescent Secondary, who received a book grant worth $250. A bursary awardee for the last few years, this book grant was presented due to her improved grades this year.

Priyadarshini, 14, who will be promoted to Secondary 3 next year, said, "I would save the amount received and use it when necessary to purchase the relevant books and other items required for my studies in school. I wish to be a Neurologist in the future and am working towards that ambition."